# “தனியார் பங்களிப்புடன் செம்மரங்கள் வளர்ப்பு”
# – வனச் சட்டங்கள் தடையல்ல!

-----

தினமணி வாசகர்கள், 26.6.2014ந் தேதியன்று “**செம்மரங்களைக் காத்திடுவோம்**” என்ற தலைப்பில் திரு.ஆர்.எஸ்.நாராயணன் எழுதிய கட்டுரையும், தினந்தந்தி வாசகர்கள், 22.6.2014ம் தேதிய “**பணம் காய்க்கும் மரம்**” என்ற தலைப்பில் வெளிவந்துள்ள கட்டுரையையும், கடந்த 6 மாத காலமாக அவ்வப்பொழுது நாளிதழ்களில் செம்மரக் கடத்தல் என ஆந்திரம், தமிழகம் முழுவதும் கடத்தல் சம்பந்தமான செய்திகளுடன், ஏன் தமிழகத்தில் உள்ள சர்வதேச விமான நிலையங்களான சென்னை, திருச்சி, கோவை, மதுரை போன்றவற்றில், சர்வதேச கடத்தல் தொடர்புள்ள மாஃபியா கும்பல்களால் மலேசியா, சிங்கப்பூர், சைனா, ஜப்பான் போன்ற பல்வேறு நாடுகளுக்கு கடத்த முயன்று, மத்திய கஸ்டம்ஸ் அண்டு சென்ட்ரல் எக்ஸைஸ் துரையினரால் பிடிக்கப்பட்டு, செம்மரங்கள் கைப்பற்றப்பட்டு, மாஃபியா கடத்தல்காரர்களை, செம்மரங்களுடன் நீதிமன்றத்தில் ரிமாண்ட் செய்யப்பட்டு, வழக்கு நடைபெற்று வருகின்றது. பல வழக்குகள் வனத்துறையினரால் பிடிக்கப்பட்டு, செம்மரங்கள் கைப்பற்றப்பட்டு, எதிரிகள் ரிமாண்ட் செய்யப்பட்டு பல வழக்குகள் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாட்டில், செம்மரம் ஒரு பட்டியல் வெட்டு மர (Scheduled Timbers) இன மரமாகும். தமிழ்நாட்டில் செம்மரத்தை தவிர தேக்கு, தோதகத்தி, சந்தனம் போன்றவையும் பட்டியல் வெட்டு மரங்கள் என தமிழ்நாடு வனச் சட்டம் 1882-ல் வரையறுக்கப்பட்டுள்ளன.

விலைமதிப்புமிக்க மரங்களான சந்தனம், செம்மரம் எனப்படும் செஞ் சந்தனம், தோதகத்தி எனப்படும் ஈட்டி, மஞ்சள் கடம்பு, வேங்கை, மயிலடி, பிள்ள மருது, செண்பகம், குமில், சிலவாகை போன்ற தடி இன மரங்கள் அரசின் காப்புக் காடுகளிலிருந்து கடத்தல் தொழில் புரிவோரால் வெட்டி கடத்தப்படுகின்றன. விலைமதிப்புமிக்க வனச் செல்வங்களை காவல் புரியும் சீருடையணிந்த வனக் காவலர், வனக் காப்பாளர், வனவர் மற்றும் வனச் சரகர் போன்றவர்களுக்கு, 2003ம் ஆண்டு வரை தமிழக அரசால், இரு சக்கர வண்டியோ, ஜீப்போ கொடுக்கப்படவில்லை. ஏன் மண்டல வனப் பாதுகாவலர் (காவல்துறையில் D.I.G. நிலை) அவர்களுக்கே, ஜீப்போ, காரோ வழங்கப்படாததால், வனப்பாதுகாவலர்கள் முகாம் வரும் காலங்களில் மாவட்ட, கோட்ட வன அலுவலர்களின் ஜீப்பையே பயன்படுத்தி வந்தனர்.

ஓர் நிலையில், வன இலாகாவிற்கு தலைமைப் பொறுப்பை முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (Principal Chief Conservator of Forests) பதவிக்கு இந்திய வனப் பணி (Indian Forest Service)க்கு பதிலாக நிர்வாகத் தலைமைக்காக இந்திய ஆட்சிப் பணி (I.A.S)

அலுவலரான திரு.பசுபதி, I.A.S., அவர்கள் நியமிக்கப்பட்டு அவர் வனத்துறையின் தலைமைப் பொறுப்பை ஏற்றவுடன் பல்வேறு சீர்திருத்தங்களை கொண்டு வந்தார். காவல் துறையில் D.I.G. நிலைக்கு சமமாக, வனத்துறையில் உள்ள, மண்டல வனப் பாதுகாவலர்களுக்கென தனி வாகனம் இல்லாத நிலை கண்டு முகாம் செல்லும் போது தன் கீழ் பணிபுரியும் மாவட்ட வன அலுவலர்களின் ஜீப்பையே பயன்படுத்துவது கண்டு, வனத்துறையின் அவலநிலையை உணர்ந்து கொண்டார்.

உடனடியாக தமிழக அரசுக்கு எழுதி அனைத்து, மண்டல வனப் பாதுகாவலர்களுக்கும், வயர்லெஸ்வுடன் உள்ள "ஸ்டாப் கார்" பெற்றுத் தந்தார். மண்டல வனப் பாதுகாவலர்களுக்கே, வாகனம் பெற்றுத் தர முடியாத இந்திய வனப் பணி அலுவலர்களே, துறையின் தலைமையை நிர்வாகித்தனர். திரு.பசுபதி, I.A.S., அவர்கள் வனத்துறை தலைமையை ஏற்ற பின்பே விழிப்புணர்வு ஏற்பட்டது.

கடந்த 2003ம் ஆண்டு வரை, காவல்துறையில், ஆய்வாளர் (Inspector of Police) நிலைக்கு ஈடான வனச் சரகர்களுக்கு ஜீப்போ, காவல் துறையில் சார்பு ஆய்வாளர் நிலைக்கு ஈடாக, வனத்துறையில் பணியாற்றும் வனவர் (Forester)களுக்கு இரு சக்கர வாகனமோ வழங்கப்படவில்லை.

2004ம் ஆண்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மேன்மைதகு **அம்மா** அவர்கள் ஆட்சியில் "மழைநீர் சேகரிப்பில்" வனத் துறையின் சாதனையை அறிந்து, வியக்கத்தக்க சாதனையை அறவமற்று புரியும் வனச் சரகர்களின் நிலை கண்டு, ஒரு வாகன வசதியற்றும் புரிந்த சாதனையை பாராட்டி, ஒரே காலக் கட்டத்தில், தமிழகம் முழுவதுமுள்ள, ஆளுமை வனச் சரகங்கள் (Teritorial Forest Ranger) அனைவருக்கும், பசுமை நிற Bolero ஜீப்பை வழங்கி, பசுமை புரட்சி செய்து வனத்துறைக்கு ஓர் அங்கீகாரம் தந்து, சமுகத்தில், வனத்துறையை தலை நிமிர வைத்தார்கள். இந்நிலையே வனத்துறை என ஒன்று உள்ளது என பொது மக்களை உணரச் செய்தது.

நாடு சுதந்திரம் அடையும் முன்பே அதாவது, நமது இந்திய தண்டனைச் சட்டம் (I.P.C.) 1860லும், இந்திய சாட்சியச் சட்டம் 1872லும், குற்றவியல் சட்டமான, மெட்ராஸ் பாராஸ்ட் ஆக்ட் 1882 (The Madras Forest Act, 1882)லும் ஆங்கிலேய ஆட்சியரால், இயற்றப்பட்டு, வனங்கள் பாதுகாப்பும், இதற்கும் முன்பாகவே, வன உயிரினம் (Wild Life) பாதுகாக்கப்படவும் வேண்டுமென கருதிய ஆங்கில ஆட்சியாளர்கள், The Madras Elephants Preservation Act, 1873 என சட்டமியற்றி வனங்களையும், வன விலங்குகளையும், பாதுகாத்து வந்துள்ளனர். இந்திய குற்றவியல் விசாரணை முறைச் சட்ட (Cr.P.C.) மே, 1973-ம் ஆண்டு, நாடு சுதந்திரம் அடைந்த பின் இயற்றப்பட்ட ஒன்றே. இதற்கு, சுமார் 100

ஆண்டுகளுக்கு முன்பே, வனங்களையும், வன விலங்குகளையும், பாதுகாக்க 1882, 1873-ல், சட்டம் இயற்றி, குற்றவியல் சட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளனர் ஆங்கிலேயர்கள்.

இன்றைய காலக் கட்டத்தில் தமிழகத்தில் நடைமுறையில் உள்ள வனம், வன உயிரினம் சம்பந்தப்பட்ட சட்டமும், விதிகளும், மிக வன்மையானவை, பலமிக்கவை. அவற்றில் உள்ள சில குறைபாடுகளை நீக்கி, நடைமுறைப்படுத்த, உரிய பயிற்சியை, உள்ளிடை பயிற்சியாக அவ்வப்போது வனத்துறையின் சீருடை பணியாளர்களுக்கு தகுந்த அனுபவம் பெற்ற பட்டறிவாளர்களைக் கொண்டு அளிக்க அரசு முன்வருமானால், வன வளமும், வன உயிரினமும், பாதுகாக்கப்பட்டு நாடு 33% வனம் என்ற இலக்கை எட்டும் என்பதில் ஐயமில்லை.

ஆனால் இன்றைய நிலையென்ன? அனைத்து திட்டங்களும், சட்டங்களும், விதிகளும், களப் பணியாளர்களான சீருடைப் பணியாளர்களை கலந்து ஆலேசிக்காது, வனத்துறையின் இந்திய வனப் பணி (I.F.S) அலுவலர்களாலேயே, ஒரு தலைப்பட்சமாக முடிவெடுக்கப்படுகின்றது. சீருடைப் பணியாளர்களின் பட்டறிவு புறம் தள்ளப்படுகின்றது. தமிழக வனத்துறையில் "இந்திய வனப் பணி" அலுவலர்கள் மட்டுமே அறிவு ஜீவிகள் போலும், சீருடைப் பணியாளர்களும், இதரரும் அறிவிலிகள் போலும் நடத்தப்படுகின்றனர். அதனால் வனச் சட்டம், விதிகள், நடைமுறைப்படுத்துவதில் தொய்வு ஏற்பட்டதால், காப்புக் காடுகளில் இருந்த விலைமதிப்புமிக்க அரிய வகையான சந்தனம், தோதகத்தி, மஞ்சள் கடம்பு போன்றவை பெரும் அளவு சமூக விரோதிகளால் வெட்டி அப்புறப்படுத்துவிட்டன. தற்போது செம்மரம் என்ற செந் சந்தானமும் (Red Sanders) சமூக விரோதிகளாலும், சர்வதேச கடத்தல்காரர்களும் கைகோர்த்து ஒருங்கிணைந்து, காப்புக் காடுகளில் உள்ள செம்மரங்களையும் வெட்டி கடத்த முயன்று வனத் துறையாலும், மத்திய கஸ்டம்ஸ் அண்டு சென்ட்ரல் எக்ஸைஸ் துறையினரால் சர்வதேச விமான நிலையங்களில் பிடிக்கப்பட்டு, தமிழகமெங்கும் பல்வேறு நிலை குற்றவியல் நீதிமன்றங்களில், குற்றவியல் வழக்குகள் நடைபெற்று வருகின்றது.

தமிழ்நாடு வனச் சட்டம், விதிகளின் படி, பட்டியல் வெட்டு மர இனமான சந்தனம், தோதகத்தி, இரண்டிற்கும் தனி, தனி, சட்ட விதிகள் உள்ளன. அதே நிலையில் பட்டியல் வெட்டு மர இனமான தேக்கு, செஞ்சந்தனம் இரண்டிற்கும் தனி சட்டமோ, விதியோ இல்லை. மேலே கண்ட நான்கிற்கும் பொதுவான விதிகள் மட்டுமேயுள்ளன.

கட்டுரையின் உட்பொருளுக்கு வருவோம். கடந்த ஒரு வருட காலமாக, ஆந்திர மாநிலம் சேஷாசலம், காப்புக் காடுகளிலிருந்து பெருமளவு செம்மரங்களை, தமிழகத்தைச்

சேர்ந்த சமூக விரோதிகள், உயிரை பனயம் வைத்து வெட்டி, சர்வதேச கடத்தல் காரர்களான மாஃபியா கும்பலிடம் ஒப்படைத்து கடத்தலுக்கு துணை போகின்றனர். இந்த செம்மரம் திருட்டுத்தனமாக வெட்டியதில் தமிழகத்தைச் சேர்ந்த வெங்கடேசன், விஜயகாந்த், சிவா என மூவரும் ஆந்திரத்தில் சுடப்பட்டு தனது இன்னுயிரை இழந்துள்ளனர். தமிழகத்தை சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் ஆந்திர மாநில சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

ஏன், "நெருப்பில் விழுந்து மாழும் விட்டில் பூச்சிகள் போல்", தமிழகத்தை விட்டு, ஆந்திர மாநிலம் சென்று, குற்றச்செயலில் ஈடுபட்டு, உயிரை இழப்பதுடன் சிறை தண்டனையும் அனுபவிக்கின்றனர்.

சர்வதேச செம்மரக் கடத்தல்காரர்களால், தடை செய்யப்பட்ட செம்மரத்தை சர்வதேச விமான நிலையம், துறைமுகங்கள், மூலம் ஜப்பான், சைனா, அமெரிக்கா போன்ற பல்வேறு நாடுகளுக்கு, மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து, நேபாளம் மூலமாக கடத்தி கொள்ளை லாபம் சம்பாதிக்கின்றனர். சர்வதேச நாடுகளில் ஒரு டன் ரூ.50 லட்சம் முதல் 5 கோடி வரை, விலை போகின்றது. இந்தியாவில் ஒரு டன் செம்மரம் 15 முதல் 20 லட்சம் வரை அடக்கவிலையாவதால், ஏழைகளை ஆசை வார்த்தை காட்டி பலமடங்கு கூலி கொடுத்து செம்மரத்தை வெட்டி வரச் செய்கின்றனர்.

சர்வதேச கடத்தல்காரர்களின் கவனம், தங்கம், வைரம், கஞ்சா, ஹெராயின், சந்தனம் போன்ற தடைசெய்யப்பட்ட கடத்தல் பொருட்களை விட, நாடும், அதிகாரிகளும் விழிப்படையுமுன் செம்மரங்களை கடத்தி, கோடி, கோடியாய் சம்பாதித்து குறைந்த காலத்தில் பெரும் கோடிஸ்வரர்களாக விரும்புகின்றனர். இதற்கு சில நெறியற்ற அரசியல்வாதிகளும், கடமை உணர்வற்ற அதிகாரிகளான கருப்பு ஆடுகளும் துணை போகின்றனர்.

பட்டியல் மரங்களான செம்மரங்கள், சந்தனம், தேக்கு, தோதகத்தி இனங்களை ஒரு நபர் 0.5 கன மீட்டர்க்கு மேல், வனத்துறையின் அனுமதியின்றி கையிருப்பு வைத்திருக்ககூடாது  என 1988ம் அண்டு விதி கூறுகின்றது. ஒரு நபர் வனத்துறையின் "முத்திரை கோடாலி" முத்திரையின்றி (Distinguishable Mark) மேற்கண்ட 4 இன மரங்களை கையிருப்பு வைத்திருக்க கூடாது என பகருகின்றது. ஒருவர் தனது தோட்டத்திலோ, பிறர் தோட்டத்திலிருந்து விலைக்கு வாங்கியோ 0.5 கன மீட்டர்க்கு மேல் கையிருப்பு வைக்கவோ, வெட்டவோ வேண்டுமெனில் 15 தினங்களுக்கு முன் சம்பந்தப்பட்ட மாவட்ட வன அலுவலருக்கு தகவலும், வெட்டப்பட்ட 15 தினங்களுக்குள் சொத்துரிமை (Property Mark)

தமிழ்நாடு மரம் கடத்தும் விதி 1968 பிரிவு 7-ன்படி பதிவு செய்ய விண்ணப்பிக்கப்பட வேண்டும்.

இந்த 1988ம் ஆண்டு விதி, பொதுவாக நான்கு பட்டியல் வெட்டு மரத்திற்கும், பொருந்துமேயன்றி, சந்தன மரத்தைப் பொறுத்த வரை, சந்தன மர கையிருப்பு விதியான 1970ம் ஆண்டு இயற்றப்பட்ட விதி, எந்தவொரு நபரும் மாவட்ட வன அலுவலரின் அனுமதியின்றி 5 கிலோவுக்கு மேல் கையிருப்பு வைத்திருக்க கூடாது என தமிழ்நாடு வனச் சட்டம் 1882 பிரிவு 36A-வும் பகருகின்றது. தோதகத்தி மரத்தைப் பொருத்த வரை, தோதகத்தி மரங்கள் (பாதுகாப்பு) சட்டம் 1994-ன் படி, வனத்துறையில் அங்கீகரிக்கப்பட்ட அலுவலரின் அனுமதியுடன் தான் இறந்த அல்லது கீழே விழுந்த மரங்களை வெட்டி "சொத்துரிமை" பதிவு செய்து பின் கையிருப்பு வைக்க வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட அலுவலரின் அனுமதியின்றி, எந்தவொரு தனியாருக்கு பாத்தியப்பட்ட தோதகத்தி இனத்தை வெட்டுவதோ, காயப்படுத்துவதோ ஊறு விலைவிப்பதோ தடை செய்யப்பட்டுள்ளது.

செம்மரத்தைப் பொறுத்தவரை, தமிழ்நாடு மரம் கடத்தும் விதி 1968, பிரிவு 9-ன்படி சம்பந்தப்பட்ட மாவட்ட வன அலுவலரிடம், படிவம் 6ல் கையிருப்புக்கான அனுமதி பெறாமல் 5Kg-க்கு மேல், மரமாகவோ, தூளாகவோ, எவ்வடிவிலும், கையிருப்பு வைத்திருப்பது, தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால் ஓர் பட்டாதார் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலரிடம் அனுமதி பெற்று 5Kg-க்கு கீழ் கையிருப்பு வைத்திருப்பதோ, எடுத்துச் செல்வதற்கோ தடை இல்லை.

ஆதலால் இன்றைய காலக்கட்டத்தில், வளைகுடா நாடுகளில் "பெட்ரோல்" எந்தளவு அன்னிய செலவானியை பெற்றுத் தருகின்றதோ, அந்தளவு செம்மரமும் நம் நாட்டிற்கு பெற்றுத்தரும் என்பதில் ஐயமில்லை. முறையான சட்டங்களும், விதிகளும் வகுக்கப்பட்டு, ஏற்றுமதிக்கு தடை செய்யப்பட்டுள்ளதை மத்திய அரசு அகற்றி சந்தனத்தையும் செம்மரத்தையும், சட்டப்படி ஏற்றுமதி செய்தால் நாம் வளைகுடா நாடுகளுக்கு இணையாக அன்னிய செலவாணியை பெற முடியும்.

தமிழக வனத்துறை, நாளது தேதி வரை தனியார்கள், தோதகத்தி, சந்தனம், செம்மரங்கள் வளர்ப்பதை, தேக்கு மரத்தைப் போல் ஊக்குவிக்கவில்லை. முறையான கண்காணிப்பில் தனியார்களை ஊக்குவித்தால் தனியார்கள் நல்ல வருமானம் கிடைப்பதால் வளர்க்க முன் வரக்கூடும். தோதகத்தி குறித்து 1994-ல் தமிழ்நாடு சட்டம் இயற்றும் போது, தோதகத்தி இனம் இயற்கையாகத் தான் வளரும் எனவும், மறு உற்பத்தி செய்ய இயலாது எனவும், அழிந்து வரும் இவ்வினத்தை காக்க வேண்டும் என சட்டத்தின் முன் வடிவில்

(Preamble) குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது வனத்துறையும், தனியாரும் பெரும் அளவில் தோதகத்தியை மறு உற்பத்தி செய்து சாதனை படைத்துவிட்டதால், காலத்திற்கேற்றார் போல் சட்டத்திருத்தம் செய்யப்பட வேண்டும். தேக்கு, தோதகத்தி, சந்தனம் போன்றவற்றிற்கு, ஒரு அளவு தண்ணீரும் ஈரப்பதமுள்ள சூழ்நிலையும் தேவை.

ஆனால் செம்மரத்திற்கு, இவை பெரும் அளவு தேவையில்லை. நல்ல வரண்ட, வெப்பமான குறைந்தளவு மழை அளவுள்ள பகுதிகளிலிலும், வறட்சியை தாக்குப்பிடித்து வளரும் மரமாகும். சொல்லப்போனால் சீமை கருவேல் போல், எவ்விடத்திலும் தாக்குப் பிடித்து வளரும் மரமாகும்.

ஆனால் வளமான செம்மண் பூமியிலும், கரிசல் மண்ணிலும், நல்ல வளர்ச்சியடையும். செம்மரத்தைப் பொறுத்தவரை அதன் ரேகை, Annual Ring போன்றவற்றிற்கு, வெளிநாடுகளில், நல்ல விலை கிடைக்கின்றது.

செம்மரத்தில் கிரைன் எனப்படும் ரேகை, போல் டர்ஸ் உள்ள செம்மண் பூமியில் நன்கு கிடைப்பதால், அரசு காப்பு காடுகள், குறைந்த மழையளவுள்ள புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர், திருநெல்வேலி மாவட்டத்தின் ஓர் பகுதிகளில் போல்டர்ஸ் நிறைந்த செம்மண் பூமி பெரும் அளவு காணப்படுவதால், குறிப்பாக Laterate Soil எனப்படும் செம்புராக்கல் நிறைந்து காணப்படுவதால், நல்ல கிரைன் உடன் கூடிய செம்மரங்கள் வளரும். ஆந்திராவில் பெரும் அளவில் செம்மரங்கள் உள்ள சேஷாசலம் வனப்பகுதியும் (Laterate Soil with boulders) இதை ஒத்து இருப்பதால், செம்மரம் வளர்க்க, பயனற்று தரிசாக கிடக்கும் பல லட்சக் கணக்கான ஏக்கர் தனியார் நிலங்களில் செம்மரங்களை வளர்க்க தனியாரை தமிழக அரசும், வனத்துறையும் திட்டமிட்டு ஊக்குவிக்கலாம். இம்மரம் வளர்ப்பதில் ஒரே பிரச்சனையைத்தான் தனியார்கள் சந்திக்க நேரிடும். நடப்பட்ட தோட்டத்தை கைவசம் வைத்து சுமார் 20 முதல் 30 ஆண்டு வரை பராமரிக்க வேண்டும். வங்கிகள் கடன் கொடுத்து ஊக்கப்படுத்தலாம். பாதுகாப்பது ஒன்றே கேள்விக்குறி? அரசு கடுமையான சட்டம் விதிகள் இயற்றி பாதுகாப்பை உறுதிப்படுத்தினால், தமிழகம், இதன் மூலம் பல கோடிக்கான டாலர்களை ஈர்க்கும், (அன்னிய செலவானியை) கொடுக்கும் கர்ப்பக விருட்சமாக திகழும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

அரசு செம்மரம் வளர்ப்புக்கு வனத்துறையில், கூடுதல் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் தலைமையில், அரசு தோட்டகழகம், அரசு ரப்பர் தோட்டக் கழகம், அரசு தேயிலை தோட்டக் கழகம், போன்று தனியாக ஒரு கழகத்தை ஏற்படுத்தி மாநிலம் தழுவிய, தரிசு நிலங்களை கணக்கெடுத்து, முன்னாள் 1960ம் ஆண்டு சமூகக் காடுகள் திட்டத்தை

உருவாக்கி, கண்மாய்களில், கருவேல் மரங்களை நட்டு சீர்மிகு திட்டமாய் உருவெடுத்து, பல லட்சக்கணக்கான ரூபாய்கள் 50% சம்பந்தப்பட்ட ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டதோ அதைப் போல் தனியார் நிலங்களில் தானாக செம்மரம் வளர்க்க முன் வராத பட்டதார் நிலங்களை அரசு அவர்களிடம் ஒரு புரிந்து உணர்வு ஒப்பந்தம் (Memorandam of Understanding) மூலம் தாமே உற்பத்தி செய்து ஒரு குறிப்பிட்ட சதவிகித்தை (30% to 50%) பட்டாதார்களுக்கு மான்யமாக வழங்க முன்வந்தால், நாடும், மாநிலமும் 33% காட்டின் வளம் என்ற இலக்கை எட்டுவதுடன், பசுமை புரட்சிக்கு வித்திட்டு மாநிலம் எங்கும் பசுமை நிறைந்து காணப்படுவதுடன், மழை வளம் பெருகி, மண் வளம் பெருகி, அரசுக்கும் தனியாருக்கும் கோடிக் கணக்கில் அன்னிய வருவாய் கிடைக்கும்.

இத்திட்டத்தை உருவாக்க, வனவியல், தாவரவியல், இயற்பியல், நிர்வாகவியல் போன்ற துறைகளின் வல்லுநர்களை ஒருங்கிணைத்து, செம்மரம் வளர்ப்பில் முணைப்பு காட்டும் செங்கிபட்டி பேராசிரியர் E.R.R.சதாசிவம், தஞ்சாவூர் தாரிபண்ணை பொறியாளர் குழந்தைசாமி, காரைக்குடி திருமிகு.ராமன் வாத்தியார் போன்ற தனியார்களையும் ஒருங்கிணைத்து, மரம் வளர்ப்பையும், பாதுகாப்பையும் உறுதி செய்ய வனத்துறை களப்பணியாளர்களையும், பாதுகாப்புக்கு காவல்துறையும் ஒருங்கிணைத்து, திட்டத்தை உருவாக்க ஓரிரு முறை கூடி விவாதித்து (Workshop) திட்டம் உருவாக்கப்பட்டால், நாடும், நகரமும், கிராமமும் வளம் பெற்று நாட்டிலேயே தமிழகம் பெரும் அளவில் அன்னிய செலாவணியை ஈட்டும் ஒரு மாநிலமாய் திகழும் என்பது திண்ணம்.

தனியார் பங்களிப்புடன், தனியார் நிலங்களிலும் செம்மரங்களை வளர்க்கச் செய்தால் ஏழை, எளிய மக்களும் கோடிஸ்வரர்களாக மாறிட பெரும் வாய்ப்புள்ளது. கார்பெரைட் கம்பெனிகள் விழிக்குமுன் அரசும், வனத்துறையும் விழிப்படையுமாக!

கர்ப்பக விருட்சமாம் செம்மரத்தை வளர்போம். வளம் பெருவோம். தனியார் வளர்ப்பதில் சட்டமும், விதியும் தடையில்லை என்பதை உணர்வோமாக !

வளர்க செம்மரம், செம்மரம் வளர்த்து மழை பெறுவோம். பணம் ஈட்டி வளைகுட நாட்டிற்கு இணையாக திகழ்வோமாக !

காடு வளர்ப்போம், கானகம் காப்போம், கவின்மிகு தமிழகத்தை உருவாக்குவோம்.

**“பெருமைக்கும் ஏனை சிறுமைக்கும் தத்தம்**
**கருமமே கட்டளைக் கல்”          - குறள்**

**சி.சுப்பையா**
**வனச்சரக அலுவலர்**
**(பணி நிறைவு)**